بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31/10/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

தபூக் போரைக் குறித்துக் கூறப்பட்டு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்டபோது இஸ்லாமியப் படை பல்வேறு இடங்களில் முகாமிட்டு பயணம் செய்தது என்றும், இந்தப் பயணம் முழுவதும் லுஹர், அஸர் மற்றும் மஃரிப், இஷா தொழுகைகளைத் தொடர்ந்து சேர்த்துத் தொழுது வந்தார்கள் என்றும் வரலாறு நமக்கு மேற்கொண்டு கூறுகிறது. இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு தொழுகைக்கு இமாமத் செய்யும் நற்பேறும் கிடைத்தது. அதேபோல், **இந்தப் பயணத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இஸ்லாமியப் படையும் ஸமூத் கூட்டத்தாரின் இடிபாடுகளுக்கு அருகில் கடந்து சென்றனர்.** அந்தப் பகுதிக்கு ஹிஜ்ர் என்று பெயர். அது மதீனாவிலிருந்து தபூக் செல்லும் வழியில் வருகிறது. தற்காலத்தில் அது 'மதாயின் ஸாலிஹ்' என்று அழைக்கப்படுகிறது. அன்னார் அந்த இடத்தின் தண்ணீரைப் பயன்படுத்தவும், அதைக் கொண்டு உளூ செய்யவும் தடை விதித்தார்கள்.

"அநியாயம் செய்த இந்த மக்களின் குடியிருப்புகளுக்குள் நீங்கள் நுழையும்போது (இறைத் தண்டனையாக) அவர்களைத் தீண்டிய வேதனை, நம்மையும் தீண்டிவிடுமோ எனும் அச்சத்துடன் அழுதுகொண்டு நுழைவதைத் தவிர வேறு விதமாக நுழையாதீர்கள்" என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் முகத்தை மூடிக்கொண்டு, சவாரியை வேகப்படுத்தினார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்தப் பயணத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கஸ்வா எனும் ஒட்டகம் தொலைந்து போன சம்பவமும் நிகழ்ந்தது.** இந்த சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: 'முஹம்மத்(ஸல்) தம்மை நபியெனக் கூறுகிறார்; ஆனால் அவரின் தொலைந்து போன ஒட்டகம் எங்கே இருக்கிறது என்று அவருக்கே தெரியவில்லை' என்று ஆட்சேபனை செய்பவன் கூறுகிறான். அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் எனக்கு எதைக் கற்றுக்கொடுத்தானோ அதைத் தவிர வேறு (மறைவான) எதையும் நான் அறியமாட்டேன்.' பிறகு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு ஒட்டகத்தைப் பற்றி அறிவித்துவிட்டான்; அது இன்னின்ன பள்ளத்தாக்கில் உள்ளது.

**இந்தப் பயணத்தின் போது பயண உணவு, அதாவது ரேஷன் பொருட்களும் தீர்ந்துவிட்டன.** வழியில் மக்களுக்குப் பசி ஏற்பட்டபோது மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், தண்ணீர் கொண்டுவரும் தம் ஒட்டகங்களை அறுக்க அனுமதி கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அனுமதி வழங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இவ்வாறு செய்தால் சவாரிகள் குறைந்துவிடும். மக்களிடம் எஞ்சியிருக்கும் உணவுப் பொருட்களை கொண்டு வரச் செய்து அதில் பரக்கத்துக்காக தாங்கள் துஆ செய்யுங்கள்' என்று விண்ணப்பித்தார்கள். ஆகவே, அவ்வாறே செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவுப் பொருளில் பரக்கத் ஏற்படுவதற்காக துஆ செய்தார்கள். அதன் விளைவாக, உணவில் எந்த அளவு பரக்கத் ஏற்பட்டது என்றால், அனைவரும் வயிறார உண்டனர். அதன் பிறகும் உணவு மீதமிருந்தது.

**இந்தப் பயணத்தின் போது பல சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றிலிருந்து பல்வேறு படிப்பினைகளும் வழிகாட்டுதல்களும் கிடைக்கின்றன. உதாரணமாக, இரு நபருக்கு இடையில் சண்டை ஏற்பட்டது.** ஒருவர் மற்றவரின் கையைக் கடித்துவிட்டார். மற்றவர் தன் கையை இழுக்க முயன்றபோது கடித்தவரின் பல் உடைந்துவிட்டது. பல் உடைந்தவர் அதற்காக இழப்பீடு கோரினார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'ஒட்டகத்தின் வாயில் மெல்லக் கொடுப்பது போல் உனது வாயில் நீ மெல்லுவதற்காக அவர் தமது கையை விட்டுவைத்திருப்பாரா?' என்று கூறி, அவரது கோரிக்கையை நிராகரித்துவிட்டார்கள். எனவே, இழப்பீடு பெறுவதற்கான தகுதியைத் தீர்மானிக்கும் தீர்ப்பும், உண்மை மற்றும் சான்றுகளைச் சார்ந்தே அமைகிறது.

**இதேபோல், இந்தப் பயணத்தின் போது ஒரு பேரீச்சந் தோட்டத்தை கடந்து செல்கையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில நபித்தோழர்களிடம், 'இந்தத் தோட்டத்தில் எவ்வளவு பேரீச்சம் பழங்கள் இருக்கும் என்று மதிப்பீடு செய்யுங்கள்?' என்று கூறினார்கள்.** அனைவரும் மதிப்பிட்டனர்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மதிப்பிட்டார்கள். அந்த தோட்டத்தின் எஜமானி அங்கு நின்று கொண்டிருந்தார். 'பழங்கள் அறுவடை செய்யப்படும்போது அதன் எடையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று அவரிடம் கூறப்பட்டது. திரும்பி வரும்போது அந்தப் பெண்ணிடம் தோட்டத்திலிருந்து கிடைத்த பழத்தின் எடை குறித்துக் கேட்கப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதிப்பிட்ட அதே எடையை அவர் கூறினார்.

**பின்னர், இந்தப் பயணத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள், 'இன்று இரவு மிகவும் கடுமையான சூறாவளிக் காற்றும் புயலும் வரும்' என்று கூறினார்கள்.** அவ்வாறே, மிகவும் கடுமையான சூறாவளிக் காற்று வீசியது. இந்தப் பயணத்தின் போது மழை பொழிதல், உணவு மற்றும் குடிநீர் அதிகரித்தல், வறண்ட கிணறுகளில் நீர் நிரம்புதல் போன்ற பல வகையான அற்புதங்களும் வெளிப்பட்டன.

**தபூக் போரில் செய்யப்பட்ட காவல் பணி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாவது;** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்புப் பாதுகாப்பிற்காக ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களை நியமித்தார்கள். அவர்கள் தம் தோழர்களுடன் படையைச் சுற்றி வலம் வருவார்கள். ஒரு நாள் அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் இரவில் சுற்றி வரும்போது தக்பீர் சப்தத்தைக் கேட்கிறோம். எங்களைத் தவிர வேறு எவரையாவது நீங்கள் காவலுக்கு நியமித்துள்ளீர்களா?'

என்று கேட்டார்கள். 'இல்லை! உங்களைத் தவிர வேறு எவரையும் நான் நியமிக்கவில்லை. ஆயினும், சில முஸ்லிம்கள் தாமாகவே முன்வந்து இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கலாம்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் சில்கான் பின் ஸலாமா (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள் - அவர்களுக்கு காவல் பணி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை; ஆயினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதான அன்பினால் தாமாகவே இந்தப் பணியைச் செய்து வந்தார்கள் - 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது பத்து குதிரை வீரர்களுடன் புறப்பட்டுச் சென்று காவல் பணி செய்பவர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறேன்' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வின் பாதையில் காவல் புரிபவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவர்கள் மீது அல்லாஹ் கருணை புரிவானாக! மனிதர்களிலோ அல்லது விலங்குகளிலோ நீங்கள் எவற்றையெல்லாம் பாதுகாத்தீர்களோ, ஒவ்வோர் உயிருக்கும், விலங்கிற்கும் பதிலாக உங்களுக்கு ஒரு கீராத் நற்கூலி கிடைக்கும்' என்று துஆ செய்தார்கள்.

**தபூக் பயணத்தின் போது ஒவ்வொருமுறை முகாமிடும்போதும் மக்களுள் சிலர் பின்தங்கிவிடுவது வழக்கமாக இருந்தது.** 'இன்னார் பின்தங்கிவிட்டார்' என்று சஹாபிகள் கூறுவார்கள். அதற்கு அன்னார், 'அவரை விடுங்கள்! அவரிடம் ஏதேனும் நன்மை இருந்தால் அல்லாஹ் அவரை உங்களுடன் சேர்த்துவிடுவான். இல்லையெனில், அவரிடமிருந்து அல்லாஹ் உங்களுக்கு விமோசனம் வழங்கி விடுவான்' என்று கூறுவார்கள். இவ்வாறே ஒருமுறை, ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களின் ஒட்டகம் மிகவும் மந்தமாகிவிட்டது. இறுதியில், அவர்கள் ஒட்டகத்தை விட்டுவிட்டு தமது பொருட்களை தலையில் சுமந்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினார்கள். சில நாட்களுக்குப் பிறகு ஒருவர் தனியாக வருவதை மக்கள் முகாமில் கண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தனர். அன்னார், 'இவர் அபூஸராக இருக்கக் கூடாதா!' என்று கூறினார்கள். அவர்கள் அருகில் வந்தபோது, அவர் அபூஸர்தான் என்று மக்கள் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அபூஸர் மீது கருணை புரிவானாக! அவர் தனியாகவே நடக்கிறார்; தனியாகவே மரணிப்பார், தனியாகவே எழுப்பப்படுவார்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இந்த கூற்று, சொல்லுக்குச் சொல் அப்படியே நிறைவேறியது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் தம் குடும்பத்தாருடன் மதீனாவிற்கு வெளியே தொலைதூர இடத்திற்குச் இடம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். அவர்களின் மரண நேரம் நெருங்கியபோது அவர்களின் மனைவி கவலையடைந்தார். அதற்கு ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள், 'கவலைப்படாதே' என்றார்கள். 'உங்களில் ஒருவர் வனாந்தரத்தில் மரணிப்பார். அவருடைய ஜனாஸா தொழுகையில் ஈமான் கொண்டோரின் ஒரு ஜமாஅத் கலந்துகொள்வார்கள்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்று கூறியவாறு, அத்துடனே 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியபோது அங்கு இருந்தவர்களில் அனைவரும் (இப்போது) மரணித்துவிட்டனர். அவர்களில் எவரும் வனாந்தரத்தில் மரணிக்கவில்லை. (அன்னார் குறிப்பிட்ட) அந்த நபர் நான்தான். எனவே, நீ கவலைப்படாதே! நான்

மரணித்துவிட்டால், என்னைக் குளிப்பாட்டி மதீனா செல்லும் பாதையில் வைத்துவிடு.' என்று ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஆகவே, அவ்வாறே செய்யப்பட்டது. சிறிது நேரம் கடந்த நிலையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் தம் தோழர்களுடன் அவ்வழியே சென்றார்கள். ஈராக்கிலிருந்து உம்ரா செய்யும் நோக்கில் அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். அது ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களின் ஜனாஸா என்பதை அறிந்ததும் அவர்கள் அழத் தொடங்கினார்கள். 'அபூஸர் தனியாகவே நடக்கிறார்; தனியாகவே மரணிப்பார் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையே கூறினார்கள்' என்றார்கள். பின்னர் அவர்கள் தம் தோழர்களுடன் ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றி அங்கேயே அவர்களை அடக்கம் செய்தார்கள்.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

ரப்வா பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்காக துஆ செய்யுங்கள். அதிகமாகக் காயம்பட்டவர்களை அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைத்து, அவர்களுக்கு விரைவில் பூரண ஆரோக்கியத்தை வழங்குவானாக.

பாகிஸ்தானில் எதிரிகளின் ஒவ்வொரு திட்டத்தையும் அல்லாஹ் தோல்வியுறச் செய்வானாக. ரப்வாவில் 'கத்மே நுபுவ்வத்' என்ற பெயரில் எதிரிகள் மாநாடு நடத்துகின்றனர். மவ்லவிகள் என்னென்ன அசிங்கங்களையும், அருவருப்புகளையும் பேச வேண்டுமோ, பேசிக்கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. பங்களாதேஷ் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் எதிரிகள் பெரும் தீய நோக்கங்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அல்லாஹ் அங்கும் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பானாக. மத்தியக் கிழக்கு நாட்டுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிந்து, அநியாயக்காரர்களிடமிருந்து அவர்களுக்கு விடுதலையளிப்பானாக. 'போர் நிறுத்தம்' என்று கூறப்பட்டது பெயரளவிலான போர் நிறுத்தம்தான் என்பதை கடந்த இரண்டு நாட்களில் நடந்த சம்பவங்கள் நிரூபித்துள்ளன. அநியாயத்திற்குள்ளான இம்மக்களை அல்லாஹ் அநியாயத்திலிருந்து பாதுகாப்பானாக. அநியாயக்காரர்களைப் பிடிப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)